*அதிகமாக இனிக்கின்ற காரணத்தினாலே, அந்த முதல் கனியை எங்களுக்குத் தந்தால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவோம். காவேரி டெல்டா பகுதியைச் சேர்ந்த அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதைக் கூறி, மீண்டும் என்னுடைய கருத்தை வலியுறுத்தி, நம்பிக்கையளிக்கக்கூடிய பதிலைத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**15—**

## நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம்

***24493—திரு. எம். இராமச்சந்திரன்:**

*மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை ஊராட்சியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** *சிறப்பு வாய்ந்த இந்த அவையினை சீரிய முறையில் நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண சூழ்நிலையில் பணியாற்றுவது என்பது ஒன்று; அசாதாரண சூழ்நிலையில்*

2020 செப்டம்பர் 16]

அசராமல் பணியாற்றி, கொரோனா வைரஸ் தொற்று என்கிற கொடிய நோயை தமிழகத்தில் குறைத்துக்கொண்டே இருக்கிறோம் என்கிற நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு அரணாக துணை நிற்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அதற்கு அருகாமையில் இருக்கின்ற பருத்திக்கோட்டையில் 34 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணா அவர்கள் ஆரம்பித்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஓர் இயக்கம். It is a movement. எப்பொழுதுமே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஓர் இயக்கம். இதயம் எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறதோ அதேபோல் இயங்கிக்கொண்டிருக்கின்ற இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதேபோல, கலைஞர் அவர்களும் அதற்குப் பின்னர் 50 ஆண்டுக் காலம் தலைவராக இருந்து பணியாற்றி, இந்த இயக்கத்தை பெரிய ஆல விருட்சமாக மாற்றிக் காட்டினார்கள். அவர் மறைவிற்குப் பின்னால் இந்த இயக்கத்தை எப்படி நடத்த முடியும் என்கிற அச்சம் ஏற்பட்டபொழுது, அதற்கு ஏற்ற தலைவரை திராவிட முன்னேற்றக் கழகம் தேர்வு செய்து, அவர் தலைமை ஏற்ற பின்னர் 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 38 தொகுதிகளில் வெற்றி கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் முழுவதும் வியக்கின்ற அளவிற்கு, காணொலிக் காட்சிமூலம் இந்த இயக்கத்தின் பொதுக் குழுக் கூட்டத்தை நடத்திக் காட்டியவர் நம்முடைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

[2020 செப்டம்பர் 16

இங்கே பேசியவர்களெல்லாம் வருங்கால முதலமைச்சர் என்று சொன்னார்கள். நான் சொல்வேன், வருங்கால முதலமைச்சர் அல்ல; நாளைய முதலமைச்சர் நம்முடைய தளபதி; எதிர்க்கட்சித் தலைவர் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த எதிர்க்கட்சித் தலைவரை வணங்குகிறேன். (குறுக்கீடுகள்) அதில் என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்) அதை எம்.ஜி.ஆர். காலத்திலேயே நாங்களும் சொல்லிக்கொண்டுதான் இருந்தோம். (குறுக்கீடுகள்) பிறகுதான் எம்.ஜி.ஆர். வந்துவிட்டார். இப்போது ஆளுங்கட்சிக்காரர்கள் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அவரும் வந்துவிடுவார். (குறுக்கீடுகள்) அதனால் ஒன்றுமில்லை. எதிர்க்கட்சியைக் கட்டிக் காக்கின்ற, எங்களுடைய கழகத்தைக் கட்டிக் காக்கின்ற தலைவர் எதிர்க்கட்சித் தலைவர், எங்கள் அன்புத் தலைவரை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–30

எங்கள் ஒரத்தநாடு பகுதியில் முதலில் குறுவை சாகுபடி செய்கிற ஒரு சூழ்நிலை இருக்கும்; அதற்குப் பின்னாலே சம்பா சாகுபடி செய்கிற ஒரு சூழ்நிலை இருக்கும். அதற்காக வேண்டித்தான் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பது வழக்கம். ஆனால், இந்தக் காலக்கட்டத்தில், இப்போதிருக்கிற சூழ்நிலையில் கழகத் தலைவர் கலைஞர் முதலமைச்சராக ஆன பின்னால், அப்படியே அது மாறி ஆழ்குழாய் கிணறுகள்மூலம் குறுவை நெல் சாகுபடி மற்றும் பல்வேறு சாகுபடிகளைச் செய்கிற சூழ்நிலையை உருவாக்கினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இலவச மின்சாரத்தைத் தந்தார்கள். ஆகையினால் இன்றைக்கு ஆண்டு முழுவதும் அறுவடை செய்கிற சூழ்நிலை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்ல, ஒரு 'மா' நிலத்திற்கு அந்தக் காலத்திலே 8 மூட்டைகள் விளைவதே கஷ்டம். ஆனால், இப்போது 16 மூட்டைகள், 17 மூட்டைகள் விளைகிறது. ஆக, அவற்றையெல்லாம் கொள்முதல் செய்து, விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால் அந்தந்த ஊர்களில் நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும். அந்தக் கிராமத்தில் அதற்குரிய சாதனங்கள், வசதிகளை செய்து கொடுக்கிறார்கள். அரசாங்கம் என்பது பெரிது. அந்தக் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடங்கள் இருந்தால்தான்

*2020 செப்டம்பர் 16]*

*விவசாயிகள் நெல்லை கொண்டுபோய் அங்கே காய வைப்பதற்கும், எடை போடுவதற்கும், சேமித்து வைப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.*

*பருத்திக்கோட்டை என்பது தூரத்தில் இல்லை. பருத்தியப்பர் கோயில்தான் பருத்திக்கோட்டை எனப்படுகிறது கீழ்வேங்கை நாட்டினுடைய தலைமையிடம். முற்காலத்தில் தஞ்சை ஜில்லாவை நான்குநாடு, ஏழுநாடு என்று பலவித நாடுகளாகப் பிரித்தார்கள். அதை கலைஞர் அவர்களும் தென்பாண்டிச் சிங்கத்திலே எழுதியிருக்கிறார்கள். பருத்தியப்பர் கோயில், பருத்திக்கோட்டை என்பது கீழ்வேங்கை நாட்டினுடைய தலைமையிடம். அதன் பக்கத்திலே இருக்கக்கூடிய தும்பத்திக்கோட்டையில் நெல் கொள்முதல் நிலையம் இருக்கிறது. பருத்திக்கோட்டையில் பருத்தியப்பர் கோயில் அருகில் நெல் கொள்முதல் நிலையம் இல்லை; கொள்முதல் கிடங்கு இருக்கிறது. அதாவது சேமிப்புக் கிடங்கு மட்டும் இருக்கிறது. ஆகையால் சேமிப்புக் கிடங்கு இருக்கிற இடத்திலேயே கொள்முதல் நிலையத்தைக் கட்டுவது என்பதைவிட, கொள்முதல் நிலையத்தை தும்பத்திக்கோட்டையில் கட்டுவது நல்லது என்பதை நான் நினைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தும்பத்திக்கோட்டையிலே ஒரு கட்டடத்தைக் கட்டி கொள்முதல் நிலையத்தைத் திறக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தும்பத்திக்கோட்டையிலே நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஏற்கெனவே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. தும்பத்திக்கோட்டையில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்குரிய தகுதியான வகைப்படுத்தப்பட்ட நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் இல்லை. அதேபோல அங்குள்ள விவசாயிகள் முன்வந்து 34 சென்ட் நிலத்தைக் கொடுத்து கட்டடத்தைக் கட்டிக் கொடுப்பதற்கான ஒரு வாய்ப்பும் இல்லை என்பதனால்தான், பக்கத்தில் 1 கி.மீ. தூரத்திலிருக்கிற பருத்திக்கோட்டையில் குறிப்பிட்ட காலமாக ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. தும்பத்திக்கோட்டையிலேயே இன்னொரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்கின்ற கோரிக்கையை*

[2020 செப்டம்பர் 16

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் வைக்கிறார்கள். நிலம், அது புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி அல்லது வேறு யாராவது ஒரு விவசாயி தானாக முன்வந்து 34 சென்ட் நிலம் கொடுப்பாரேயானால், அங்கேயே ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் புதிதாகக் கட்டிக் கொடுப்பதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரை, விவசாயிகளின் நலன் காக்கிற அரசு என்பது இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்குமே நன்றாகத் தெரியும். கடந்த 2011 ஆம் ஆண்டுவரை 273 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்தான் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வந்தன. அதற்குப் பின்னர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சி. அதற்குப் பின்னர் வந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் 658 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களாக அதிகரித்துள்ளன. 385 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை முடியும் தருவாயில் இருக்கின்றன. இவையெல்லாம் முடிகின்றபோது 658 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும், அவர் சொன்ன தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் அதிகமான நெல் விளைச்சல் இருக்கிற பகுதிகளில் இந்த ஆண்டுகூட 90 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அங்கே நெல் கொள்முதல் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10–35

**திரு. எம். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் நிலையம் திறப்பது என்பது மிகவும் அத்தியாவசியமாகிவிட்டது. திராவிட முன்னேற்றக்

*2020 செப்டம்பர் 16]*

*கழக ஆட்சிக் காலத்தில் இயற்கையாகவே நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்மூலம் கிடைக்கும் அரிசி அரசாங்கத்திற்குப் போதுமானதாக இல்லை. ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட சூழ்நிலை அல்ல. இன்றைக்கு நெல் கொள்முதல் செய்தாலே தமிழகத்திற்குத் தேவையான நெல்லைவிட அதிகமாக நமக்குக் கிடைக்கிறது. ஆனால், அப்படி தேவைக்கு அதிகமாக கிடைக்கிறபோது ஆங்காங்கே விவசாயிகள் பல்வேறு இடங்களுக்குத் தூக்கிச் செல்கிறார்கள். இப்போது தஞ்சையில் பார்த்தால் சாலை முழுவதும் நெல் கொட்டி வைக்கப்பட்டிருக்கின்றது; மழை பெய்கிறது. மழையினால் அவர்கள் சிரமப்படுகிறார்கள். அது முளைத்துவிடுகிறது. நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு மேலும் தாமதமாகிறதோடு மட்டுமல்லாமல் 'இன்றைக்குத் திறக்கிறேன், நாளைக்குத் திறக்கிறேன்' என்று* Collector *போன்றவர்களெல்லாம் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் அணுகிக் கேட்கிறோம். ஆக, இப்படிப்பட்ட காரணங்களால் நெல் கொள்முதல் செய்வது தடைபட்டுக் கிடக்கிறது. சில நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்க முடியாமலும் இருக்கின்றன. ஆகையினால் டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் உடனே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து நெல் கொள்முதலை செய்யுமாறு தங்கள் மூலமாகக் கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கொள்முதல் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை ஒரு மிகப் பெரிய சாதனையாக இந்த ஆண்டு 31 இலட்சத்து 26,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது வரலாறு என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்னால் 2011 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட்டதனால் அந்த ஆண்டு குறுவையைச் சேர்த்து 23 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதுதான் அதிக கொள்முதல் வரலாறாக இருந்தது. இன்றைய*

தேதிவரை 31 இலட்சத்து 26,000 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது இந்த ஆண்டுதான் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இதுவரை நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அதிகபட்சமாக 1,808 தான் இருந்தன. இந்த ஆண்டு, 2,132 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, எங்கெல்லாம் விவசாயிகள் தேவையென்று கருதுவார்களோ, அந்த இடங்களிலெல்லாம் உடனடியாகத் திறக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்கள். எந்த இடத்தில் தேவையென்றாலும் உடனடியாகத் திறப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு 24 மணி நேரத்திலே பணம் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதனை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். E-procurement system மூலம் உடனடியாக அவர்களுக்குப் பணம் போய் சேர்ந்துவிடுகிறது. எனவே, நெல்லை நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கே கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்முடைய விளைச்சல் மட்டுமே நம்முடைய தேவையை நிறைவு செய்யுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். அவர் மிக மூத்த உறுப்பினர். ஆழ்ந்த கருத்தைக் கொண்டவர். நம்முடைய மாதாந்திரத் தேவை என்பது 2 இலட்சத்து 92,000 மெட்ரிக் டன் ஆகும். இந்த ஆண்டுதான் 32 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். எனவே, இந்த 68 சதவிகித Out Turn என்று சொல்கிறபோது, அது நம்முடைய தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யாது. இருந்தபோதிலும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட decentralised procurement அடிப்படையிலேதான் எல்லா காலங்களிலும், எங்கள் ஆட்சியிலும் சரி, உங்கள் ஆட்சியிலும் சரி, நெல் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்றைக்கும் அப்படித்தான் நடந்துவருகிறது; இன்னும் கூடுதலாக வளர்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த மார்ச் 24 ஆம் தேதிக்குப் பிறகு இன்றைக்குவரை, கொரோனா வைரஸ் தொற்று காலத்திலும் 11,32,000 மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு என்பதனை

*2020 செப்டம்பர் 16]*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**திரு. ஆ. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தன், ஈரோட்டு தந்தை, தமிழ்நாட்டில் சமூக விடுதலை பெற்றுத் தந்த ஐயா பெரியாரை வணங்குகிறேன். நம்மை ஆளாக்கிய அறிவுலக மேதை, தென்னாட்டு காந்தி, இந்நாட்டு இங்கர்சால் என்று போற்றப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நூற்றாண்டு விழா கண்ட தலைவர் கலைஞரை வணங்குகிறேன். இந்த கொரோனா வைரஸ் தொற்று காலத்திலும் நேற்றையதினம் முப்பெரும்விழா மூலமாக அண்ணாவுக்கு விழா எடுத்த எங்களுடைய கழகத்தின் தலைவரைப் போற்றி (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதமாக சட்டமன்றத்தைக் கூட்டியிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*என்னுடைய பூந்தமல்லி தொகுதியில் புலியூர் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு 20,000–க்கு மேற்பட்ட நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரைக்கும்தான் நெல் கொள்முதல் செய்ய முடியும் என்றும், அதன்பின் நெல் கொள்முதல் செய்ய முடியாது என்பதற்காக பக்கத்து தொகுதியான கும்மிடிப்பூண்டி, காதர்வேடு கிராமத்திற்கு விவசாயிகள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். காதர்வேடு கிராமத்திற்குப் போகின்றபோது எங்கள் தொகுதியைச் சார்ந்தவர்களைப் புறக்கணித்து, வியாபாரிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததாக என்னிடம் புகார்கள் வந்தன. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைப்பதற்காக புலியூர் கிராமத்தில் ஆண்டு முழுவதுமாக நெல் கொள்முதல் செய்வதற்கு ஒரு* godown*–ஐ கட்டித் தரவேண்டுமென்று அந்தப் பகுதி மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், புட்லூர் கிராமத்தில் உள்ள 50 ஏக்கர் விவசாயப் பண்ணை நீண்டகாலமாக மூடப்பட்டு கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அங்கு விவசாயப் பண்ணையும், விதைப்*

பண்ணையும் தொடங்குவார்களா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை 21 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அந்த 21 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதன்மூலம் 33,152 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர், நண்பர் அவர்கள் புலியூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுகுறித்து ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதனை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, வேளாண்மைத் துறையைச் சார்ந்த ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அதுகுறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. M.S.R. ராஜவர்மன் அவர்கள்.

**திரு. M.S.R. ராஜவர்மன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்தநாள் விழா. நாளையதினம் ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் பிறந்தநாள் விழா. இன்றைக்கு எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றை புறமுதுகுக் காட்டி ஓடச் செய்த, தமிழகத்தினுடைய முதலமைச்சர், குடிமராமத்து நாயகன் எங்கள் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கும், இந்த ஆட்சிக்கும், கட்சிக்கும் உறுதுணையாக இருக்கின்ற ஜல்லிக்கட்டு நாயகன் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். சாத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜபாளையம் கிழக்கு ஒன்றியம்,

*2020 செப்டம்பர் 16]*

*மேலராஜகுலராமன் பஞ்சாயத்தில் சட்டிகிணறு, திருவேங்கடபுரம் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன. அந்த கிராமங்களைச் சுற்றியுள்ள விவசாயிகள் சார்பாக அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் இந்த ஆண்டு 17 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அந்த 17 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தக் கிராமங்களில் நெல் விளைச்சலைக் கணக்கில்கொண்டு, ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

**திரு. கு. பிச்சாண்டி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே நெல் குறைவாகவும், கோதுமைதான் அதிக அளவிலும் கொள்முதல் செய்யப்படுகின்றன. இன்றைக்கு நெல்லுக்கு விலை கிடைக்காமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கொள்முதல் நிலையங்கள் திறந்ததால்தான் அதிக விலையிலே நெல் விற்கப்படுகிறது. இல்லாவிட்டால் 800 ரூபாய் என்ற குறைந்த விலையிலேதான் விற்கப்படுகிறது. கொள்முதல் நிலையங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டத்தில், எங்கெங்கு நெல் விளைகிறதோ அங்கெல்லாம் இந்தக் கொள்முதல் நிலையங்கள் திறந்திருந்தால்தான் வெளி மார்க்கெட்டிலே தனியார்கள் அதிக*

*விலை கொடுத்து நெல்லை வாங்குகிறார்கள். இல்லாவிட்டால் நெல் விலை மிகவும் குறைந்துவிடுகிறது. ஆகவே, விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதை உணர்ந்து, ஆண்டு முழுவதும் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, நெல்லை கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல் கூடுதலாக விளைகிற மாவட்டங்களில் திருவண்ணாமலை மாவட்டமும் ஒன்று. மாண்புமிகு எதிர்க்கட்சி துணைக் கொறடா அவர்கள், எந்தப் பகுதியிலே சொல்கிறார் என்று தெரியவில்லை. எந்தெந்த இடங்களிலெல்லாம் நெல் விளைச்சல் அதிகமாக இருக்கிறதோ அந்தந்த இடங்களிலெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டு, உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவையான இடங்களில் திறக்கப்பட்டு, இன்றைக்குவரை நெல் கொள்முதல் சிறப்பாக நடந்து வருகிறது. எனவே, அவர் எந்த இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னாலும் அந்த இடத்திலே விவசாயிகளினுடைய நலனைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, அங்கே உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும். அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி அவர்கள், புலியூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று கேட்டார். அது 1–8–2020 முதல் மறுபடியும் செயல்படத் தொடங்கியிருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*